**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர்கள் கழகம்**

# பரீட்சகரின் அறிக்கை

## AA2 பரீட்சை – 2019 சனவரி

## (AA21) உயர் நிதிக் கணக்கீடு

---

## பகுதி A

நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)
(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

இவ்வினா 20 புள்ளிகளுக்கான கட்டாய வினாவாகும். உயர் நிதிக் கணக்கீட்டுப் பாடத் திட்டத்தை உள்ளடக்கும் வகையிலான அறிவு இங்கு பரீட்சிக்கப்பட்டிருந்தது.

**(1.1)** இங்கு நிகரச் சம்பளம் மீதான பரீட்சார்த்திகளின் அறிவு பரீட்சிக்கப்பட்டது. 50 % ஆன பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்திருந்தனர். சிலர் ETF மற்றும் EPF ஆகிய இரண்டையும் 12 % இல் மொத்தச் சம்பளத்திலிருந்து கழிப்பனவு செய்திருந்தனர். சிலர் 8 % இற்குப் பதிலாக 12% இல் EPF ஐக் கழிப்பனவு செய்திருந்தனர். பரீட்சார்த்திகள் இத்தகைய நடைமுறை வினாக்களது கணிப்பீடுகள் மீது கவனம் செலுத்துதல் வேண்டும்.

**(1.2)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்குச் சரியான விடை அளிக்கவில்லை. தொக்குகளின் மிகைப்படுத்திக் கூறல் காரணமாக இலாபத்தில் ஏற்படும் தாக்கம் பற்றிய அறிவு இவ்வினாவில் பரீட்சிக்கப்பட்டது.

**(1.3)** கடன் சாதனங்களின் இயல்புகள் பற்றி அறிந்திராத காரணத்தால் பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்திருக்கவில்லை.

**(1.4)** பெரும்பாலானவர்கள் இதனைச் சரியாகக் கணித்திருக்கவில்லை. இது அட்டுறு செலவுகள் மற்றும் முற்கொடுப்பனவுகள் பற்றிய அறிவைப் பரீட்சார்த்திகள் கொண்டிருக்கவில்லை என்பதைக் காட்டுகிறது.

**(1.5)** நடைமுறைப் பரிப்புகள் பற்றிய மாணவர்களின் அறிவைப் பரீட்சித்திருந்த இவ்வினாவுக்கு மொத்தமாக ஒதுக்கப்பட்ட இரண்டு புள்ளிகளையும் பெரும்பாலானவர்கள் பெற்றிருக்கவில்லை.

**(1.6)** இங்கு நிகர தேறத்தக்க பெறுமதியைப் பயன்படுத்தி தொக்கின் பெறுமதியைக் கணிப்பது பற்றிய அறிவு பரீட்சிக்கப்பட்டது. பெரும்பாலானவர்கள் சரியாக விடையளித்திருந்த போதிலும் சிலர் ரூ.300,000/- பணிசையை கழித்திருக்கவில்லை.

**(1.7)** பெரும்பாலானவர்கள் சரியாக விடையளித்திருக்கவில்லை. அவர்கள் இதற்காக சம்பந்தமற்ற விடைகளை எழுதியிருந்தனர்.

**(1.8)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் வெற்றிகரமாக விடையளித்திருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்த செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.**

# பகுதி B

ஐந்து (05) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 02

இவ்வினா வியாபாரக் கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு பற்றிப் பரீட்சித்திருந்தது. இந்தப் பாடப்பரப்பு சம்பந்தமான அறிவு குறைவாக இருந்த காரணத்தால் சிலர் இவ்வினாவுக்கு வெற்றிகரமாக விடையளிக்கவில்லை. பெரும்பாலான பரீட்சார்த்திகள் நாளேட்டு விற்பனைகளின் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்த ரூ. 20,000/- இனையும் தவறுதலாக நாளேட்டு விற்பனைகளில் பதியப்பட்ட கொள்வனவு விலைப்பட்டியல் தொகை ரூ. 27,000/- இனையும் சரியாக செம்மையாக்கம் செய்திருந்தனர். ஆயினும், ரூ. 28,000/- கட்டுப்பாட்டுக் கணக்கில் சரியாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது என வினாவில் தெளிவாகத் தரப்பட்டிருந்தது. சிலர் அதனையும் கட்டுப்பாட்டுக் கணக்கில் செம்மையாக்கம் செய்திருந்தனர். ஒரு சிலர் அனுமதிக்கப்பட்ட கழிவுகளை வரவுப் பதிவாகக் கருதியிருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமாக இருந்தது.**

## வினா 03

இவ்வினா பங்குடமையின் பகிர்வுக் கணக்கினைத் தயாரிப்பது தொடர்பான அறிவைப் பரீட்சித்திருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் கோட்பாடுகளில் காணப்பட்ட குறைவான அறிவு காரணமாக பகிர்வுக் கணக்கில் எடுப்பனவுகளைக் காட்டியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் இலாபப் பங்கினைச் சரியாகக் கணிப்பதற்குத் தவறியிருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.**

## வினா 04

பெரும்பாலானவர்கள் தொகுக்கப்பட்ட சம்பளத் தாளுக்கு பிழையான விடைகளை வழங்கியிருந்தனர். மாதிரியானது வினாவில் வழங்கப்பட்டிருந்த போதிலும் அவர்கள் அந்த மாதிரியினைச் சரியாக நிரப்பியிருக்கவில்லை. நிகரச் சம்பளத்தைக் கணிப்பிடும்போது கழிப்பனவு செய்யப்பட வேண்டிய உருப்படிகள் எவை என்பதையோ நிகரச் சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு எவ்வாறு மொத்தச் சம்பளத்தைக் கணிப்பிடுவது என்பதையோ அவர்கள் அறிந்திருக்கவில்லை. அவர்கள் கூட்டுவதற்குப் பதிலாக நிகரச் சம்பளத்திலிருந்து மீண்டும் கழித்திருந்தனர். அதன் அடிப்படையில் பரீட்சார்த்திகள் நலன்புரி நிதியப் பங்களிப்பினைப் பிழையாகக் கணித்திருந்தனர், EPF 8% மற்றும் 12%, ETF 3%.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டது.**

## வினா 05

இங்கு செம்மையாக்கம் செய்யப்பட்ட காசேடு மற்றும் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று ஆகியவற்றைத் தயாரிப்பதன் மீதான அறிவு பரீட்சிக்கப்பட்டது. சில பரீட்சார்த்திகள் காசேட்டுடன் சம்பந்தப்பட்ட பதிவுகளை அடையாளங் கண்டிருக்கவில்லை. அவர்கள் அத்தகைய பதிவுகளை வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் குறிப்பிட்டிருந்தனர். சில பரீட்சார்த்திகள் காசேட்டின் ஆரம்ப மீதியினைச் சரியாக அடையாளங் காண்பதற்குத் தவறியிருந்தனர். காசேட்டு மீதியினைப் பெறுவதற்கு, முதலில் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் மீதியினைக் கருத்திற் கொள்ளும்போது தேறாத காசோலைகள் கூட்டப்பட வேண்டும் என்பதுடன் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் கழிக்கப்பட வேண்டும். சிலர் இதனை மறுதலையாகக் கருதியிருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.**

## வினா 06

இவ்வினா அங்கத்துவச் சந்தாக் கணக்கு பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. சில பரீட்சார்த்திகள் இறுதி மீதியினைச் சரியாகப் பதிவதற்குத் தவறியிருந்தனர். சிலர் ஆண்டின் காலப்பகுதிக்குரிய காசுப் பெறுவனவுகளைச் சரியாகக் கணிப்பிட்டிருக்கவில்லை. மாணவர்கள் சந்தா நிலுவைகள் மற்றும் முற்கொடுப்பனவுகள் மீதான சரியான பதிவுகள் பற்றித் தெரிந்து கொள்ளுதல் வேண்டும். சிலர் முன்னராகப் பெறப்பட்ட சந்தாவை வரவுப் பதிவாகக் கருதியிருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.**

# பகுதி C

மூன்று (03) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 07

இவ்வினா இலாப நோக்கற்ற நிறுவனங்களுக்கான கணக்கீடு பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சித்திருந்தனராயினும் சிலர் மாத்திரமே முழுமையான புள்ளிகளைப் பெற்றிருந்தனர். பின்வரும் வழுக்களும் பலவீனங்களும் அவதானிக்கப்பட்டன :

(1) **பகுதி (a)** ஆனது போசனசாலை வியாபாரக் கணக்கினை தயாரிக்குமாறு தேவைப்படுத்தியிருந்த போதிலும், சில பரீட்சார்த்திகள் போசனசாலை வியாபாரக் கணக்கிற்குப் பதிலாக அங்கத்தவர் சந்தாக் கணக்கினைத் தயாரித்திருந்தனர்.

(2) அதிகளவான பரீட்சார்த்திகள் விளையாட்டுக் கழகம் இலாப நோக்கற்ற நிறுவனமாக இருந்த போதிலும் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படுகின்ற போசனசாலை ஒரு இலாபமீட்டும் வியாபாரம் என்பதை விளங்கியிருக்கவில்லை. எனவே, அவர்கள் போசனசாலையின் கொள்வனவுகள், விற்பனைகள், ஆரம்ப மற்றும் இறுதி இருப்புகள் என்பவற்றை வருமான செலவினக் கணக்கினுள் உள்ளடக்கியிருந்தனர். இது போசனசாலையிலிருந்தான இலாபமாக வருமானக் கூற்றில் கருதப்படுதல் வேண்டும்.

(3) சில பரீட்சார்த்திகளின் கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு தொடர்பான அறிவு மிகவும் குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டது. எனவே, அவர்கள் போசனசாலையின் கொள்வனவுகளைச் சரியாகக் கணிப்பிடுவதற்குத் தவறியிருந்தனர். கொள்வனவுப் பெறுமதிகளை கண்டுபிடிப்பதற்கு கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கினைத் தயாரிக்கும்போது, சில பரீட்சார்த்திகள் கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கின் பிழையான பக்கங்களில் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகளைக் குறிப்பிட்டிருந்தனர். கடன்கொடுத்தோர் கணக்கு பொதுவாக செலவு மீதியொன்றைக் கொண்டிருக்கும் என்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை என்பதையே இது புலப்படுத்துகிறது. மேலும், சில பரீட்சார்த்திகள் வழங்கல்களுக்காகச் செலுத்தப்பட்ட ரூ. 24,200/- தொகையினை கொள்வனவுகளாகக் குறிப்பிட்டிருந்தனர்.

(4) சில பரீட்சார்த்திகள் வியாபாரக் கணக்கினைச் சரியாகத் தயாரித்து சரியான இலாபத்தைக் கணிப்பிட்டிருந்தனர். ஆயினும் அந்த இலாபம் வருமான, செலவினக் கணக்கிற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

(5) போசனசாலை தொடர்பான மொத்த இலாபத்தைக் கணிப்பிட்டதன் பின்னர், மேலுள்ள இலாபத்திலிருந்து கழிப்பதற்கு இரண்டு செலவினங்கள் காணப்பட்டன ஆயினும் அதிகளவான பரீட்சார்த்திகள் அதனைச் செய்வதற்குத் தவறியிருந்தனர்.

(6) சில பரீட்சார்த்திகள் உரிய ஆண்டிற்கான சந்தா, மின்சாரம் மற்றும் விளையாட்டு உபகரணங்களின் தேய்மானம் ஆகியவற்றைச் சரியாகக் கணிப்பிடுவதற்குத் தவறியிருந்தனர்.

(7) பெரும்பாலான பரீட்சார்த்திகள் ஆயுட்கால அங்கத்துவ நிதி வருமானத்தில் 10% இனை சரியாகக் கணிப்பிடுவதற்குத் தவறியிருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.**

## வினா 08

இவ்வினா நிதி நிலைக் கூற்றைத் தயாரிப்பது பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. நிதி நிலைக் கூற்று தொடர்பான அடிப்படை அறிவு குறைவாக இருந்தமையைக் காணக்கூடியதாக இருந்தது. மாணவர்கள் நிதி நிலைக் கூற்று பற்றிய அடிப்படை அறிவைக் கொண்டிருத்தல் வேண்டும். பரீட்சார்த்திகளில் 80 % இற்கும் அதிகமானோர் விற்பனை இலாபத்தைச் சரியாகக் கணிப்பிட்டிருக்கவில்லை.

அவதானிக்கப்பட்ட சில பொதுவான தவறுகள் கீழே தரப்படுகின்றன :

(1) மோட்டார் வாகன விற்பனையானது நிதி நிலைக் கூற்றில் சரியாகப் பதிவு செய்யப்படவில்லை. பெரும்பாலானவர்கள் ரூ. 1,300,000/- பெறுமதியான விற்பனை நடவடிக்கையினை கருத்திற் கொண்டிருக்கவில்லை.

(2) மோட்டார் வாகனத்தின் விற்பனை இலாபமானது நிகர இலாபத்திலிருந்து செம்மையாக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(3) திகதியிடப்பட்ட காசோலை ஊடாகச் செய்யப்பட்ட மோட்டார் வாகன விற்பனையானது நிதி நிலைக் கூற்றில் சரியாகப் பதிவு செய்யப்படவில்லை. அதிகளவான பரீட்சார்த்திகள் இதனை காசு மீதியினுள் சேர்த்திருந்தனர்.

(4) இறுதி இருப்பின் கிரயம் NRV ஐ விட உயர்வாக இருந்தது ஆயினும் அதிகளவான பரீட்சார்த்திகள் நிதி நிலைக் கூற்றில் இதனைச் சரியாகப் பதிவு செய்யவில்லை அதே போன்று தரப்பட்ட நிகர இலாபத்தில் இருப்புச் செம்மையாக்கமும் செய்யப்படவில்லை.

(5) நிதி நிலைக் கூற்றானது ஏற்றுக்கொள்ளப்பட்ட வடிவத்திற்கு இணங்கத் தயாரிக்கப் படவில்லை.

(6) சிலர், எந்தெந்த உருப்படிகளை சொத்தாகவும் பரிப்பாகவும் உள்ளிட வேண்டும் என்பது பற்றிய அறிந்திருக்கவில்லை.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.**

## வினா 09

இவ்வினா பங்குடமைக் கணக்குகள் பற்றிய அடிப்படை அறிவைப் பரீட்சித்தது. இது மூலதனக் கணக்கு மற்றும் நடைமுறைக் கணக்கு ஆகியவற்றைத் தயாரிப்பதற்குத் தேவைப்படுத்தியது.

பங்குடமைக் கணக்குகள் மீதான அடிப்படை அறிவு குறைவாக இருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. இங்கு நன்மதிப்பைக் கணிப்பதற்கும் அதனை மூலதனக் கணக்குகளில் செம்மையாக்கம் செய்வதற்கும் எதிர்பார்க்கப்பட்டது. இங்கு ஒரு சில மாணவர்கள் மூலதனக் கணக்குகள் ஊடாக சரியாகச் செம்மையாக்கம் செய்திருந்தனர் ஆயினும் ஏனையவர்கள் நடைமுறைக் கணக்கின் ஊடாகச் செம்மையாக்கம் செய்திருந்தனர். அதிகளவான பரீட்சார்த்திகள் நடைமுறைக் கணக்கினைச் சரியாகத் தயாரித்திருக்கவில்லை. பரீட்சார்த்திகள் பங்குடமைக் கணக்குகள் பற்றிய அடிப்படை அறிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

அவதானிக்கப்பட்ட சில பொதுவான தவறுகள் கீழே தரப்படுகின்றன :

(1) பெரும்பாலான பரீட்சார்த்திகள் பங்காளர்களின் சம்பளத்தைச் சரியாகக் கணிப்பிட வில்லை. வினாவில் மாதாந்தச் சம்பளம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அவர்கள் வருடாந்த சம்பளத்தை கணிப்பிடவில்லை.

(2) வினாவின்படி, இரண்டு பங்காளர்கள் மாத்திரமே சம்பளம் பெறுவதற்கு உரித்துடைய வர்கள். ஆயினும் சிலர் சகல பங்காளர்களுக்காகவும் கணிப்பிட்டிருந்தனர்.

(3) சில பரீட்சார்த்திகள் பங்காளர்களின் நடைமுறைக் கணக்கில் ஆரம்ப மீதியினைச் சரியாக பதிவு செய்யவில்லை. வினாவில் ஒரு செலவு மீதியும் இரண்டு வரவு மீதிகளும் தரப்பட்டிருந்த போதிலும் அனைத்தும் ஒரே இடத்திலேயே பதிவு செய்யப்பட்டிருந்தன.

(4) அதிகளவான பரீட்சார்த்திகள் இலாபப் பங்கைக் கணிப்பிடுவதற்கான செய்முறை களைக் காட்டியிருக்கவில்லை.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.**

## பகுதி D

ஒரு கட்டாய வினா

(25 புள்ளிகள்)

## வினா 10

இங்கு வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி ஒன்றின் முகாமையின் பாவனைக்காக முற்றடக்க வருமானக் கூற்று மற்றும் நிதி நிலைக் கூற்று ஆகியவற்றைத் தயாரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. இதில் கணக்கீட்டு நியமங்கள், இரட்டைப் பதிவு மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகள் தொடர்பான அறிவு பரீட்சிக்கப்பட்டது.
அவதானிக்கப்பட்ட சில பொதுவான தவறுகள் கீழே தரப்படுகின்றன :

(1) சிலர் வருமானக் கூற்று மற்றும் நிதி நிலைக் கூற்று ஆகியவற்றுக்கான சரியான வடிவத்தைப் பயன்படுத்தியிருக்கவில்லை.

(2) சில பரீட்சார்த்திகள் குறிப்பிடு மூலதனத்தின் அதிகரிப்பு மற்றும் தனிச்ச வட்டி ஆகியவற்றைச் சரியாகக் கணிப்பிட்டிருக்கவில்லை.

(3) புதிய இயந்திரத்தின் நிறுவுதல் கிரயம் பெரும்பாலான பரீட்சார்த்திகளால் மூலதன மாக்கப்பட்டிருக்கவில்லை. அதே போன்று கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரம் மீது செலுத்தவேண்டிய தொகைகள் மற்றும் இயந்திரம் மீதான நிறுவுதல் கிரயங்கள் என்பன நிதிக் கூற்றுக்களில் சரியாகக் காட்டப்படவில்லை.

(4) சொத்துக்கள் மீதான தேய்மானமானது சில பரீட்சார்த்திகளால் செய்முறைத் தாள்களில் சரியாகக் கணிக்கப்பட்டிருந்தது. ஆயினும் அவை நிதிக் கூற்றுக்களில் பொருத்தமான இடங்களினுள் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

(5) அட்டுறுக்கள் செய்முறைத் தாள்களில் காட்டப்பட்டிருந்த போதிலும் சில பரீட்சார்த்திகளால் பதிவுகள் சரியாகக் காட்டப்படவில்லை. முற்கொடுப்பனவுகள் சில பரீட்சார்த்திகளால் நடைமுறைப் பரிப்புகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(6) செலுத்தப்பட்ட வருமான வரியானது சில பரீட்சார்த்திகளால் ஏனைய நிதிச் செலவுகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(7) நிருவாகச் செலவினங்கள் மற்றும் விநியோகச் செலவினங்கள் ஆகியவற்றுக்கான விபரமான செய்முறைகள் சில பரீட்சார்த்திகளால் காட்டப்பட்டிருக்கவில்லை. எனவே சில புள்ளிகளைப் பெறுவதற்கு அவர்கள் தவறியிருந்தனர்.

(8) குறுகிய கால முதலீடு (6 மாத நிரந்தர வைப்புகள்) நடைமுறைச் சொத்துகளின் கீழ் காட்டப்படுவதற்குப் பதிலாக நடைமுறையல்லாச் சொத்துகளின் கீழ் காட்டப் பட்டிருந்தது.

(9) சில பரீட்சார்த்திகள் செம்மையாக்கத்துடன் தொடர்புடைய தொகைகளை ஆயிரங்களில் காட்டுவதற்குத் தவறியிருந்தனர். பரீட்சை மீதியின் தொகைகள் ஆயிரங்களில் காட்டப்பட்டிருந்தது. மாணவர்கள் சரியாக வாசித்திருக்கவில்லை.

(10) 2018 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளபடியான வியாபார வருமதிகளுக்கான ஐயுறவுக் கடன் ஏற்பாடு ரூ. 123,000/- ஆக இருந்த போதிலும் சிலர் ரூ. 123,000/- உடன் ஆரம்ப மீதியான ரூ. 57,000/- இனைச் சேர்த்திருந்தனர் (மொத்தம் ரூ. 180,000/-)

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.**

**<u>பரீட்சார்த்திகளின் செயலாற்றுகையை விருத்திசெய்வதில் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய பொதுவான விடயங்கள்</u>:**

**(1)** பாடத்திட்டத்தின் முழுமையான உள்ளடக்கத்தை ஆழமாகக் கற்று, ஒவ்வொரு அலகிலும் எதிர்பார்க்கப்படும் அறிவு மட்டத்தில் நல்லதொரு புரிந்துணர்வுடன் ஒவ்வொரு அலகினது அறிவையும் மேம்படுத்திக் கொள்ளவும்.

**(2)** வினாவைப் பல தடவைகள் வாசித்து, சகல கணிப்பீடுகளுக்குமான செய்முறை களைத் தெளிவாகக் காட்டுக.

**(3)** ஏதாவது எடுகோள்கள் எடுக்கப்படின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடுக.

**(4)** தெளிவான கையெழுத்தில் எழுதுவதுடன் விடைகளின் இலக்கங்களையும் சரியாக எழுதவும். விடைத்தாளை ஒப்படைப்பதற்கு முன் வினா இலக்கங்களை மீளவும் பரிசீலிப்பது கட்டாயமானதாகும்.

**(5)** வினாப்பத்திரத்தில் தரப்பட்ட அறிவுறுத்தல்களைச் சரியாகப் பின்பற்றவும்.

**(6)** கடந்தகால வினாப்பத்திரங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட விடைகளில் பயிற்சி பெறுவதானது செயலாற்றுகையை மேம்படுத்திக் கொள்வதற்கு உதவியாக அமையும். ஒரே அமைப்பைக் கொண்ட விடயங்கள் திரும்பவும் பரிசீலிக்கப்பட முடியும். எனவே இது சகல நேரங்களிலும் நன்மையானதாக அமையும்.

**(7)** இந்த மட்டத்துடன் சம்பந்தப்பட்ட கணக்கீட்டு நியமங்களைப் படிக்கவும். இப்பாடத் திற்குரிய பாடப்புத்தகம் மற்றும் சஞ்சிகைகள் ஆகியவற்றையும் அதேபோன்று பாடம் சம்பந்தமான வேறு விடயங்களையும் கற்றுக் கொள்ளவும்.

**(8)** நேர முகாமை மிக முக்கியமானதாகும். ஒவ்வொரு வினாவுக்கும் செலவழிக்கப்பட வேண்டிய நேரத்தை புள்ளிகள் ஒதுக்கப்பட்டுள்ள விதத்தைப் பார்த்து தீர்மானித்துக் கொள்ள முடியும்.

**(9)** நல்ல தயார்படுத்தலுடனும் பரீட்சையில் சித்தியடையும் இயலளவு உச்ச நம்பிக்கை யுடனும் பரீட்சைக்கு முகங்கொடுக்கவும்.

- * * * -